# அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடு ஆதரித்து உண்ணும் போராட்டம்

கோவை, நவ. 18-
அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீட்டை ஆதரித்தும், அதிகப்படுத்தக் கோரியும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கோவை காந்திபுரம் தமிழ்நாடு ஓட்டல் முன்பு இன்று உண்ணும் போராட்டம் நடந்தது. பெரியார் தி.க. பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ராமசாமி, கோபால், ரஞ்சித்பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் போராட்டத்தை துவக்கி வைத்தார்.



அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீட்டை ஆதரித்தும், அதிகப்படுத்தக் கோரியும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கோவை காந்திபுரம் தமிழ்நாடு ஓட்டல் முன்பு இன்று உண்ணும் போராட்டம் நடந்தது.

போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு சர்க்கரை பொங்கல், பழங்கள், சமோசா, பொரி, கடலை உருண்டை, பிஸ்கட், பொரி உருண்டை, ரொட்டி, வாழைப்பழம், முறுக்கு, அதிரசம், மிக்சர் ஆகியவை வழங்கப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில செயலாளர் சிவஞானம், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சுசி.கலையரசன், பெரியார் திக கலங்கல் வேலு, உள்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

(18-11-2011) தமிழ் முரசு